**ஹாலிஎல பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஹாலிஎல பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, ஹாலிஎல பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

**1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 05 நிர்மாண வேலைகளுக்குரிய நிர்மாண வேலை தடுத்து வைத்தல் பணம் ரூபா 172,478 தொகை பொது வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | அடுத்த வருடம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டில் உள்ளூராட்சி உதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்டிருந்த முன்பள்ளி கட்டிடம் ஒன்றின் திருத்த வேலை மேற்கொள்ளல் தொடர்பாக ரூபா 389,426 இற்கான நிர்மாண வேலைகளின் பெறுமதி நிதி நிலைமைக் கூற்றில் பெற வேண்டிய நிர்மாண வேலை கடன்பட்டோர் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |

**1.7 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| <u>இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை</u> | | | |
| நிதிப் பிரமாணம் 371(1) | 2014 ஆண்டின் போது துணை பாதைகள் 03 இற்காக அங்கீகரிக்கப்பட்ட 03 சங்கங்களுக்கு செலுத்தியிருந்த ரூபா 415,117 இற்கான முற்பணத்தை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அறவீடு செய்வதற்கு அல்லது பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என குறிப்பிடப்பட்டுள்ளது. | முற்பணங்கள் தீர்க்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 30,417,043 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 14,808,211 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

**வருமானம் சேகரித்தல் செயலாற்றல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 மற்றும் 2019 ஆண்டுகள் முதல் காணப்படுகின்ற 2480 வீடுசார் வீதவரி அலகுகளிலிருந்து நிலுவை வீதவரி ரூபா 1,040,205 தொகையினை மீளாய்வாண்டின் போதும் அறவீடு செய்திருக்கவில்லை. | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. | நிலுவை வீதவரி அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | ஒரு வருடத்திற்கு மிகையான காலம் முதல் காணப்படுகின்ற வருடாந்தம் வாடகைக்கு கொடுக்கப்படும் இறைச்சிக் கடை, வாராந்த சந்தை மற்றும் 38 கடையறைகளுக்கான நிலுவை வாடகை ரூபா 2,309,669 தொகை மீளாய்வாண்டின் போதும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கொவிட் நிலைமை காரணமாக அறவீடு செய்வதில் தாமதம் அடைந்ததென குறிப்பிடப்பட்டுள்ளது. | நிலுவை வாடகை அறவீடு செய்யப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபைக்குச் சொந்தமான 04 உப அலுவலகங்களுக்கு மற்றும் சேதனப் பசளை செயற்களங்களுக்கு 2021 செப்தெம்பர் 02 திகதி ரூபா 777,972 தொகை செலவொன்று மேற்கொண்டு CCTV கெமரா பொருத்தப்பட்டிருந்தது. | சபையின் அங்கீகாரம் கிடைக்கப்பட்டிருந்ததென மற்றும் அதன்படி கொள்வனவு மேற்கொள்ளப்பட்டதென குறிப்பிடப்பட்டுள்ளது. | பாதீட்டு ஏற்பாடுகளின் படி கொள்வனவு மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் போது பொது நிருவாக மூலதனச் செலவு விடயத்தின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 148,000 தொகை ஏற்பாடுகள் போதியளவாக காணப்படாமையால் ஏனைய 07 செலவு விடயங்களின் ரூபா 629,972 இற்கான ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டிருந்தது. அந்த கொள்வனவுகளுக்காக சபையின் அங்கீகாரம் பெற்றிருக்காததுடன், 2021 நவம்பர் 17 திகதி நிதிக் குழுவின் தீர்மானத்தின் மீது மாத்திரம் துரித கொள்வனவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | |

**3.2 செயற்பாட்டுத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியத்தின் கீழ் பாதையொன்று அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 1,984,002 தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், நிர்மாண வேலையின் மேற்கொள்வதற்காக 2021 ஆகஸ்ட் 31 திகதி ரூபா 1,871,700 இற்கான தொகையொன்றுக்கு அங்கீகரிக்கப்பட்ட சங்கம் ஒன்றுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2021 நவம்பர் 30 திகதி நிர்மாண வேலையின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2022 மார்ச் 04 திகதி வரை வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன், நிர்மாண வேலை உடன்படிக்கைக் காலம் முடிவடைந்து கால நீடிப்பு பெற்றுக்கொண்டிருக்கவில்லை. சபையின் அங்கீகாரம் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் பரிந்துரையின்றி 2021 செம்தம்பர் 14 திகதி சபைச் செயலாளரின் பரிந்துரையுடன் ரூபா 374,340 இற்கான முற்பணத் தொகையொன்று அங்கீகரிக்கப்பட்ட சங்கத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. | சந்தையில் பண்டங்களின் விலை அதிகரித்தல் காரணமாக முற்பணம் செலுத்த நேரிட்டதென மற்றும் எதிர்காலத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் பரிந்துரையுடன் கொடுப்பனவு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. | முற்பணம் அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | கிராமீய மற்றும் பாடசாலை விளையாட்டுக்கள் உட்கட்டமைப்பு வசதிகள் மேற்பாட்டு அமைச்சின் ஏற்பாடுகளின் கீழ் ஹாலிஎல பிரதேச செயலகத்தின் மேற்பார்வையின் கீழ் பிரதேச சபையினால் ஹாலிஎல | செயற்திட்டத்தின் பகுதியொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன், மதிப்பீட்டை திருத்தி 2022 ஆண்டின் போது அங்கீகாரம் பெற்றுக்கொள்வதென குறிப்பிடப்பட்டுள்ளது. | முற்பணம் அறவீடு செய்யப்பட வேண்டும். |

விளையாட்டுத் திடலின் பொது கழிவறை நிர்மாணிப்பதற்காக இரு தரப்பினரிடையே புரிந்துணர்வு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி 2021 திசெம்பர் 31 திகதி நிர்மாண வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2022 மார்ச் 04 திகதி அளவிலும் நிர்மாண வேலையின் பௌதீக பூர்த்தி செய்யப்பட்ட வேலையின் முன்னேற்றம் 15 சதவீதம் மாத்திரம் காணப்பட்டதுடன், உடன்படிக்கைக் காலம் முடிவடைந்திருந்த போதிலும் கால நீடிப்பு பெற்றிருக்கவில்லை. தொழில்நுட்ப உத்தியோகத்தரின் பரிந்துரை பெற்றுக்கொள்ளாமல் ரூபா 618,249 இற்கான முற்பணம் ஒன்று மற்றும் சபையின் அங்கீகாரம் இன்றி சபைச் செயலாளரின் பரிந்துரை மீது நிர்மாண வேலையின் பில் பத்திரங்களுக்காக ரூபா 373,486 தொகை செலுத்தப்பட்டிருந்தது.